அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

# அறத்துப்பால் - ஒழுக்கமுடைமை

131.ஒழுக்கம் விழுப்பம் தரலான், ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்.

பொருள்:

ஒழுக்கமே எல்லார்க்கும் மேன்மையைத் தருவதாக இருப்பதால்,அந்த ஒழுக்கமே உயிரை விடச் சிறந்ததாகப் போற்றப்படும்.

132.பரிந்து ஓம்பிக் காக்க,ஒழுக்கம்-தெரிந்து ஓம்பித்
தேரினும் அ.்.தே துணை.

பொருள்:

ஒழுக்கத்தை வருந்தியும் போற்றிக் காக்க வேண்டும்: பலவற்றையும் ஆராய்ந்து போற்றித் தெளிந்தாலும்,அந்த ஒழுக்கமே வாழ்க்கையில் துணையாக விளங்கும்.

133.ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்

இழந்த பிறப்பாய் விடும்.

பொருள்:

ஒழுக்கம் உடையவராக வாழ்வதே உயர்ந்த குடிப்பிறப்பின் தன்மையாகும்:ஒழுக்கம் தவறுதல் இழிந்த குடியிருப்பின் தன்மையாகி விடும்.

134.மறப்பினும் ஒத்துக் கொளஎல் ஆகும் பார்ப்பான்

பிறப்புஒழுக்கம் குன்றக் கெடும்.

பொருள்:

கற்ற மறைப் பொருளை மறந்தாலும் மீண்டும் அதனை ஓதிக்கற்றுக் கொள்ள முடியும்:ஆனால் மறை ஓதுவனுடைய குடிப்பிறப்பு ,ஒழுக்கம் குன்றினால் கெடும்.

135.அழுக்காறு உடையான்கண் ஆக்கம் போன்று இல்லை
ஒழுக்கம் இலான்கண் உயர்வு.

பொருள்:

பொறாமை உடையவனுக்குச் செல்வம் இல்லை என்பது போல, ஒழுக்கம் இல்லாதவனுக்கு உயர்குலம் என்பதும் இல்லை.

136.ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர்-இழுக்கத்தின்
ஏதம் படுபாக்கு அறிந்து.

பொருள்:

ஒழுக்கம் இழந்தால் தனக்குக் குலந்தாழ்வு உண்டாகும் என அறியும் மன உறுதி உடைய பெரியோர், கடினமே என்றாலும் ஒழுக்கத்திலிருந்து விலகமாட்டார்.

137.ஒழுக்கத்தின் எய்துவர், மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி.

பொருள்:

ஒழுக்கத்தால் எவரும் மேம்பாட்டை அடைவர்: ஒழுக்கத்திலிருந்து தவறுதலால் அடையத் தகாத பெரும் பழியை அடைவர்.

138.நன்றிக்கு வித்து ஆகும் நல் ஒழுக்கம் தீ ஒழுக்கம்
என்றும் இடும்பை தரும்.

பொருள்

நல்லொழுக்கம், அறமாகிய நன்மைக்கு வித்தாக அமைந்து இம்மை மறுமையிலும் இன்பம் தரும்: தீயொழுக்கமோ துன்பமே தரும்.

139.ஒழுக்கம் உடையவர்க்கு ஒல்லாவே-தீய
வழுக்கியும், வாயால் சொலல்.

பொருள்:

தீய சொற்களைத் தவறியும் தம் வாயால் கூறுவது, ஒழுக்கம் உடையவர்க்குப் பொருத்ததாகும்.

140.உலகத்தோடு ஒட்ட ஒழுகல், பல கற்றும்,
கல்லார் அறிவிலாதார்.

பொருள்:

உலகத்து உயர்வரோடு பொருந்த ஒழுகும் முறையைக் கற்காதவர், பல நூல்களைக் கற்றிருந்த போதிலும் அறிவில்லாதவரே ஆவர்.



நன்றி . . . !!!